## JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU
## CC No.181/2017

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : Pw4 |
| Name | : Unnikrishnan |
| Father/Husband's Name | : Gopalan |
| Village | : |
| Taluk | : Kilambakkam |
| Calling | : |
| Age | : 55 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 30.01.2026.

**Accused absent.**

**குறுக்கு விசாரணை:**

28.08.2014 ம் தேதி நான் செங்கல்பட்டு ரயில்நிலையத்தில் 6வது நடைமேடையில் ரோந்து பணியில் இருந்தேன் என்றால் சரிதான். அந்த சமயத்தில் வேறு யார் யார் ரோந்து பணியில் இருந்தார் என்றால், திரு. ரமேஷ் ஆய்வாளர், திரு.வெள்ளையன், உதவி ஆய்வாளர், திரு.கார்த்திகேயன், தலைமை காவலர் மற்றும் சாகாக்கள் இருந்தனர். நான் ரோந்து பணியில் செல்வதற்கு மேல் அதிகாரியின் உத்தரவு பெறப்பட்டதா என்றால் எனது மேல் அதிகாரி வெள்ளையன் உதவி ஆய்வாளர் உத்தரவின் பேரில், நானும் அவருடன் சேர்ந்து ரோந்து பணிக்கு சென்றோம். சென்னை எக்மோர்யிலிருந்து மங்களூர் செல்லும் ரயில் வண்டி செங்கல்பட்டு ரயில் நிலையத்தில் நிற்கும் போது, சந்தேகப்பட கூடிய நபர், பார்சல் பெட்டியில் தொங்கி கொண்டிருந்த பார்சல் கார்டை, சந்தேகத்தின் பேரில் பிடித்து பார்த்து கொண்டிருந்ததற்கு வரைபடம் தயார் செய்யப்பட்டதா என்றால் இல்லை. மேற்சொன்ன சம்பவம் தொடர்பாக ரயில்வே பாதுகாப்பு படையினரோ, தென்னக ரயில்வே ஊழியர்களோ புகார் ஏதேனும் கொடுத்தார்களா என்றால் இல்லை. கன்னியாகுமரியிலிருந்து அவுரா செல்லும் எக்ஸ்பிரஸில் 21.06.2014ம் தேதி சம்பவம் நடைபெற்றது. கன்னியாகுமரியிலிருந்து அவுரா செல்லும் எக்ஸ்பிரஸ் Super fast என்றால் சரிதான். அன்றைய தேதியில் மேல்மருவத்தூரில் ரயில் வண்டி நின்றதா என்றால் நின்றது.

அந்த சம்பவம் பற்றி ரயில் ஓட்டுநரையோ அல்லது கார்டையோ விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டதா என்றால் அதை பற்றி தெரியாது. நான் சொன்ன நேரத்தில், சொன்ன தேதியில், ஆய்வாளருடன் செங்கல்பட்டு ரயில் நிலையத்தில் ரோந்து பணிக்கு செல்லவில்லை என்றாலும், சாட்சி கணேசன் மற்றும் சந்திரசேகரன் ஆகியோர் முன்னிலையில் எந்த ஒப்புதல் வாக்குமூலமும் பதிவு செய்யவில்லை என்றாலும் பார்வை மகசர் தயார் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. அதசா.ஆ14 மற்றும் அதசா.ஆ15 அலுவலகத்தில் பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. மேல் அதிகாரியின் உத்தரவிற்கிணங்க தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Typewritten to my dictation in open
court read over to the witness in Tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct.

sd/-S.Sahaana
Judicial Magistrate No.II,
Chengalpattu.